நலத் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்ததற்குப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26.4.94) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 10-03 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.
அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

104. திருவாளர்கள் பிரஸ்வுட் இன்டஸ்டிரீஸ் அவர்களால் இனிவரும் முதல் ஐந்து வருட காலங்களில் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரியை தள்ளி வைப்பது குறித்து 29.7.1993-ஆம் நாளிட்ட 261 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

105. கோயம்புத்தூர், திருவாளர்கள் அஷ்சயா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், அவர்களால் செலுத்தவேண்டிய விற்பனை வரியை தள்ளி வைப்பது குறித்து 18.10.1993-ஆம் நாளிட்ட 358—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

106. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் 1992-93 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

111. கோரிக்கை எண் 29- சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்).

112. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஒன்பதாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

113. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தாம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

114. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பதினோராம் பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).